# அடியாள் விண்ணப்பம்

தலைப்பட்டோம் யாம்
தலைவன் தாளே.
தெய்வத்துக்காளானோம்
தேவருக்கே அடிமை செய்தோம்.
எம்மைக் குலைத்து
எம்மனோரை விலைப்படுத்தி
எம்குலத்தை இழித்துரைத்த
கீசகர்கள் எக்குலமோ ?

சாதி ஒழிந்ததாம்.
சொல்லுகிறார்கள்.

இம்மண்ணில் வந்து
அவதரித்த பூமகள்
வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள்
வைத்திட்ட நாமகள்
இன்னோரையும் இன்று
குலப்பெயர் சாட்டிக்
கொக்கரிக்கும் வக்கரித்த

கூட்டத்தார்க்கென் சொல்ல?

பூமித்தாய் நீ !

இதுவும் பொறுப்பாய்

இன்னமும் பொறுப்பாய்.

கரையொன்றில்லாக்

கருணைக் கடலே !

அடியாள் விண்ணப்பம்

ஏலோர் எம்பாவாய்!

துட்டர் வாய்த் துடுக்கடக்கி

அவர் தமக்கும் தயை கூர்ந்து

கண்ணியம் கற்றுத் தா !

**ஸுஜாதா விஜயராகவன்**